**ஹபுதளை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூலை 17 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 24 திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து ஹபுதளை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதிய மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் ரூபா 7,573,439 பெறுமதியாக காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் அதனை ரூபா 7,725,316 காட்டப்பட்டுள்ளன. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு சபை பராமரிக்கும் வங்கிக் கணக்கு சம்மந்தமான காசுப் புத்தகத்தின் படி மீதி ரூபா 461,192 ஆக இருந்தபோதும் அதனை நிதிக்கூற்றில் ரூபா 329,266 ஆக காட்டப்பட்டுள்ளது. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | நாட்குறிப்பு மூலம் சரி செய்கின்றேன். |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு சபை பராமரிக்கும் வங்கிக் கணக்கு சம்மந்தமான காசுப் புத்தகத்தின் படி மீதி ரூபா 274,456 ஆக இருந்தபோதும் அதனை நிதிக்கூற்றில் ரூபா 374,456 ஆக காட்டப்பட்டுள்ளது. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | நாட்குறிப்பு மூலம் சரி செய்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,775,480 ஆக இருந்தபோதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,394,590 ஆக காட்டப்பட்டிருந்தது. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | நாட்குறிப்பு மூலம் சரி செய்கின்றேன். |
| (v) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உள்நாட்டு அபிவிருத்தி திடடத்தால் சபைக்கு கிடைத்த ரூபா 1,630,000 பெறுமதியான மூலதனம் பெற்றுக் கொண்டதை நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | நாட்குறிப்பு மூலம் சரி செய்கின்றேன். |

**(ஆ) வேறுபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு ஒப்பந்த கடன்கொடுநர் நிலுவை நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 10,826,280 ஆக இருந்த போதிலும் குறிப்புக்களின் படி ரூபா 9,977,903 ஆக காட்டப்பட்டமையால் ரூபா 848,377 வேறுபாடு அவதானிக்கப்பட்டன. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | நாட்குறிப்பு மூலம் சரி செய்கின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய இலக்கம் 1980/46 சுற்றுநிருபம் | 05 வருடத்திற்கு ஒரு தடவை ஆதனவரி விலைமதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தம் கையெழுத்திட்டு வேண்டியிருந்த போதிலும் சபைக்கு சொந்தமான 62 கடைகள் விலை மதிப்பீடு செய்யாது சபைத்தீர்மானப்படி மூன்றாம் நபருக்கு வாடகைக்கு வழங்கியிருந்தது. | அறிவுறுத்தல்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 வருடத்திற்கான விலை மதிப்பீடு செய்து கொண்டிருக்கிறோம். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,651,624 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,770,817 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 922,073 | 2,244,511 | 1,497,442 | 1,669,142 | 213,586 | 1,556,511 | 856,906 | 913,192 |
| (ii) | வாடகைகள் | 670,543 | 2,747,290 | 4,016,291 | - | 716,157 | 3,678,040 | 2,641,740 | 1,752,457 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | - | 600,000 | 1,336,295 | - | - | 500,000 | 697,078 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 15,169,605 | 11,694,250 | 14,971,839 | 11,892,016 | 8,505,007 | 9,338,500 | 13,645,524 | 4,197,984 |
| | மொத்தம் | 16,762,221 | 17,286,051 | 21,821,867 | 13,561,158 | 9,434,750 | 15,073,051 | 17,841,248 | 6,863,633 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| 3 வருடத்திற்கு மேலாக காணப்பட்ட நிலுவை மூலதன பெறுகை ரூபா 9,921,066 பெறுமதியும், நிலுவை ஏனைய வருமானம் ரூபா 389,983 உம், நிலுவை ஆதனவரி ரூபா 1,123,853 உம், நிலுவை ஏக்கர்வரி ரூபா 2,195 உம், பற்றானைக் கட்டணங்களும் குற்றப் பணங்களும் ரூபா 9,209 உம் , நிலுவை கடை வாடகை ரூபா 139,300 உம் நிலுவை இறைச்சிக் கடை வாடகை ரூபா 102,702 உம், நிலுவை சந்தை கட்டணம் ரூபா ரூபா 55,620 உம், நிலுழைவ கடை தண்டப்பணம் ரூபா 12,780 உம், மற்றும் நிலுவை வாகன வரி ரூபா 955,299 உம் ஆக கிடைக்க வேண்டிய வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். | அறவிடக்கூடிய வருமான நிலுவைகளை அறவிடுகின்றோம். மற்றும் நீண்ட காலமாக காணப்பட்ட நிலுவை வருமானங்களை பதிவளிப்பு செய்ய ஏற்பாடு செய்கின்றேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 239,590 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 8,685,194 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | தொடர்புடைய சகல ஆவணங்களும் தற்போது கிடைத்திருக்கின்றது. தற்போது காசு எடுப்பதற்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தின் 126 பந்தியின் பிரகாரம் 30 நோக்கம் செய்வதற்கு உபவிதிகள் செய்யப்படவேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 11 நோக்கங்களுக்காக உபவிதிகள் செய்யப்பட்டது அல்லது உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகள் செய்யாத காரணத்திற்காக உபவிதிகள் செய்யப்பட வேண்டும். | உபவிதி செய்ய வேண்டிய பிரிவிற்கான அனுமதிக்கப்பட்ட உப சட்டத்தை உள்வாங்கி மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளோம். |

#### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக்கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும். | சுகாதார வசதிகள் இல்லாத மக்களுக்கான அவ் வசதிகள் சேவைகளை வழங்க ஏற்பாடு செய்கின்றோம். |

## 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| 03 வருடத்திற்கு அதிகமான காலத்தில் இருந்து காணப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 11,691,956 செலுத்த வேண்டிய கடன் நிலுவை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்ய வேண்டிய கடன் மீதி தீர்ப்பனவு செய்ய வேண்டும். | செலவின கடன்கொடுநர் மீதியில் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்வது சம்மந்தமாக அந்த வருடத்தில் தீர்ப்பனவு செய்யமுடியாமல் போன பட்டியல் தொகை உள்ளடங்கியுள்ளது என பதில் வழங்கியுள்ளன. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கூடுதலாக ஒரு பதவிக்கும் மற்றும் 06 பதவிக்கு 11 வெற்றிடம் உள்ளன. | வெற்றிடம் அதிகமாக இருத்தல் தொடர்பாக சரியான தீர்மானம் எடுக்பக வேண்டும். | இது சம்மந்தமாக மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திற்கு தகவல் வழங்கியுள்ளேன். |
| (ஆ) | 11 அலுவலர்களின் அறவிட வேண்டிய ரூபா 62,956 பெறுமதியான கடன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய கடன் தொகை அறவிடப்பட வேண்டும். | உரிய அலுவலர்களுக்கு தகவல் வழங்கியுள்ளோம். தற்போது அறவீடு செய்து கொண்டிருக்கிறோம். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கு பிரதேச சபையினால் உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் திட்டம் தயாரித்து சரியான முறையில் உள்ளக கணக்காய்வு திட்டம் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 4.2 கணக்காய்வு முகாமைத்துவ குழு நடாத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 2 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | மீளாய்வாண்டில் நிறுவன ரீதியில் 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் செய்துள்ளோம்.மாகாண உள்ளூராட்சி திணைக்கள மட்டத்தில் 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தியுள்ளார்கள். அதற்கு சமூகமளித்து நிறுவன பிரச்சினைகளை ஆராய்ந்திருக்கின்றோம். |